# முன்னிலைப் பெயர்

ஆசிரியர்:

பேரா. ச. வையாபுரிப்பிள்ளை

பதிப்பாசிரியர்:

டாக்டர் அ. காமாட்சிநாதன்

*அண்ணாமலைப் பல்கலைக்கழகம்*

மொழியியல் (1987) 10:157-173

# முன்னிலைப் பெயர்

**ச. வையாபுரிப்பிள்ளை***

(**சுருக்கம்:-** முன்னிலைப்பெயர்களின் வரலாற்றை இக் கட்டுரை ஆராய்கிறது. ஆராய்ச்சியின்போது முன்னிலைப்பெயர்கள் பற்றிய நனனூல் சூத்திரங்களிற் காணப்படும் ஒருசில குறைகள் எடுத்துக்காட்டப்படுகின்றன. முன்னிலைப்பன்மைப் பெயராகிய நீம் என்பதன் பழைமையும் அதன் பின்னைய திரிபுகளும் இலக்கியம், இலக்கணம், அவற்றுக்கெழுந்த உரைகள் ஆகியவற்றிலிருந்து சிறந்த சான்றுகளுடன் விளக்கப்படுகின்றன.)

இனி, 'உன்' முதலிய சொற்களை நோக்குவோம். இது 'நீ' என்னும் முன்னிலை யொருமைச் சொல், வேற்றுமை உருபேற்குமிடத்துத் திரிந்துவரும் வடிவமாகும். தன்மை முதலிய இடப்பெயர்கள் வேற்றுமை கொள்ளுமிடத்துத் திரிந்து வருதல் மொழிகள் பெரும்பாலானவற்றிற்கு ஒத்த வழக்காம். வடமொழியில் அஹம் என எழுவாய் வேற்றுமையிலும், மாம், மயா, மஹ்யம் முதலியனவாகப் பிற வேற்றுமைகளிலும் வருகின்றன.[1] லத்தின் மொழியில் ego என்பது எழுவாய்; me, mei, mihi, me என்பன பிறவேற்றுமைகள். ஜெர்மன் மொழியில் ich என்பது எழுவாய்; mein (er),+ mir, mich என்பன பிறவேற்றுமைகள். பிரஞ்சு மொழியில் je என்பது எழுவாய்; me, moi, mon என்பன பிற வேற்றுமைகள். ஆங்கிலத்தில்; எழுவாய் I me, my என்பன பிற வேற்றுமைகள். திராவிடமொழிகளிலும் இங்ஙனமே வேற்றுமையில் எழுவாய்கள் திரிந்தனவே. இவ்வழக்கினோடு ஒத்துத் தமிழிலும் நீ என்பது நின் எனத் திரிந்துவரும். தொல்காப்பியர்

---

*பதிப்பாசிரியர்;- அ. காமாட்சிநாதன்.

+இதற்கு 'he' என்பது பொருள்.

"நீ யென் னொருபெயர் நெடுமுதல் குறுகும்"
ஆவயின் னகரம் ஒற்ருகும்மே, (உருபியல் 7)

என்றனர். பவணந்தி முனிவரும் இங்ஙனமே கூறினர்.

யான், யாம், நீ, நீர், என் எம், நின் நும் ஆம்பிற (உருபு.8) என்பது நன்னூல். இங்குக் கூறிய நின் என்பதுவே பழமையான வடிவம். பிற திராவிடமொழிகளில் முன்னிலை யொருமைப் பெயர்களை நோக்கி இதனை அறியலாம். சங்க இலக்கியங்களிலும் தொல்காப்பியர் காட்டும் சொல் வழக்கே காணப்படுகிறது. இவ்விலக்கியங்களில் 'நின்' என்பதுவே[2] யாண்டும் வழங்கப் பட்டுள்ளது. சங்க காலத்து இறுதியில் தோன்றிய கலித்தொகை பரிபாடல் என்ற நூல்களிலும் இவ்வழக்கேயுள்ளது.[3]

நீ என்பதன் பன்மை நீயிர் எனவே தொல்காப்பியர் கூறினர். 'நீயிர் நீயென வருஉங் கிளவி' (பெயர். 31) என்பது சொல்லதிகாரச் சூத்திரம். ஆனால், இவ்வாசிரியர் கருத்தின் படி நும் என்பது நீயிர் எனத்திரிந்ததெனல் வேண்டும்.

அல்லதன் மருங்கின் சொல்லுங் காலை
உக்கெட நின்ற மெய்வயின் ஈவர
இ இடை நிலைஇ ஈறுகெட ரகரம்
நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே
(புள்ளி மயங்கியல், 31)

இச் சூத்திரத்தின் கருத்து ஊன்றி நோக்கற் பாலது. நும் என்பது 'நீம், என்றாகிப் பின் நீஇர் என முடிந்ததெனல் அதன் கருத்து. இதனால் நும் என்பது முற்கால வழக்காயிருந்து அதன் பிற்பாடு நீஇர் என்பது கால அடைவில் தோன்றியதென்று தொல்காப்பியர் கொண்டார். தொல்காப்பியர் கருத்து அமைதி யுடையதென்பது மேற்கூறுவதனானே உணரலாகும். 'நன்னூ லார் இச்சொல் வரலாற்றை நுனித்து நோக்கினாரில்லை. எழு வாய் வேற்றுமை திரிபில் பெயரே[4] என்னும் பொது நியதியை மனத்துட்கொண்டு, நீயிர் என்பதன் பிற்கால வடிவமாகிய நீர் என்பது 'நும்' எனத் திரிந்தது என்றனர்.[5] கால முற்பாடுகளை

அவர் பொருட்படுத்தவில்லை என்பது இதனால் தெளிவா கின்றது. இந்நுண்பொருளில் அவர் பிழைபட்டனர் என்றுதான் கூறவேண்டும். ஆசிரியர் தொல்காப்பியர் நீம் என நிறுத்தியது வெறுங்கற்பிதமன்று. கன்னடத்திலும் கோதமொழியிலும நீம் நீமெ என்பன முறையே காணப்படுதலால், தமிழிலும் ஒரு காலத்து நீம் வழங்கியிருத்தல் வேண்டுமென ஊகிககலாம். ஆனால் தொல்காப்பியர் காலத்து அவ்வழக்கு வீழ்ந்து ,நீஇர் என்பது உலக வழக்கில் புகுந்திருத்தல் வேண்டும். தம் காலத்து வழங்கிய நும் என்ற சொற்கொண்டு வழக்கு வீழ்ந்த சொல்லி னைப் புலப்படுத்தி, பிற்கூறிய சொல்லினின்றும் நீஇர் என்பது தோன்றிற்று எனக் காட்டுதலே தொல்காப்பியர் கருத்தாம். கால அடைவை நோக்கி இவர் உண்மை வரலாற்றைக் கூறி யுள்ளது பெரிதும் பாராட்டற்பாலதாம். சீவக சிந்தாமணியில் (1932)[a] "நீம்-ஏ, வென்றிக் களிற்றானுழைச் செல்வது வேண்டும் என்றான்', என வருகின்றது. இங்கே நச்சினார்க்கினியர் 'நும் என்னும் சொல் நீஇர் என முழுவதுந் திரியாது மகரம் நிற்பத் திரிந்து நீம் என நின்றது' எனக் குறிப்பெழுதினர். செந்தமிழ் வழக்கொழிந்து நீம் கொடுந்தமிழ் நாடொன்றில் திசைச்சொல் லாய் வழங்கலுற்று எஞ்சி நின்றதனை ஆசிரியர் எடுத்தாண்ட னர் என்று கொள்ளுவதே நேரியதாகும். இதுபற்றியே இனி 'நீமென்று ஒரு திசைச் சொல்லுமாம், என்று பக்ஷாந்தரமாக அவர் எழுதியதென்க.

தொல்காப்பியர் அமைத்த நீஇர் என்பதனை ஒழித்து நன்னூலார் (12- ஆம் நூற்றாண்டின்னிறுதி) நீயிர், நீர், நீவிர் என்ற மூன்றனையும் முன்னிலைப் பன்மைகளாகத் தந்துள்ளார்.

'தான் யான் நான் நீ யொருமை: பன்மை தாம்
யாம் நாம் எலாமெலீர் நீயிர், நீர், நீவிர்'

(நன். பெயரியல் 30)

என்பது சூத்திரம். இவர் நீஇர் என்பதற்குரிய உடம்படுமெய் தோன்றிய வடிவங்களையே (நீயிர், நீவிர்) கொண்டனர்.

a1932- 3

11-ஆம் நூற்றாண்டில் தோன்றிய வீரசோழியத்தில், நீர் என்பது குறிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதன் உரை, 'நீர் என்பது நீயிர் நீவிர் என ஆதேசமாம்' எனக் கூறுகிறது.[6] 13ஆம் நூற்றாண்டினதாகிய நேமிநாதம்

> பேராம்பெயர்; பெயர்த்துப் பேர்த்தாம்; ஒடுவோடாம்;
> நீராகும் நீயிர்; எவனென்ப- தோருங்கால்
> என் என்னை யென்றாகும்; யாமுதற்பேர் ஆமுதலாம்;
> அன்ன பொழுது போதாம்.

எனத் தெரிகின்றது. நீயிர் என்பது நீர்[7] எனத் திரிந்தது. பழையவாய் நடைபெற்று வருஞ் சொற்களில் திரிந்து நடப்பனவற்றை வழுவல்லவென்று அமைத்தலை உணர்த்துதல் நுதலிற்று என்பது பழையவுரை. இதனால் நீர் என்பது வழுவமைதியாதல் தெளியப்படும். முதன் முதல் உலகவழக்கிலே இச்சொல் தோன்றுதல் இயற்கை. ஐயப்பாடியின்றிக் காலவரையறை செய்யக்கூடிய இலக்கியங்களை நோக்குவோமானால், கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து முன்னிலைப் பன்மையில் நீர் வழங்கப்பட்டுள்ளது. உதாரணமாக அப்பர் தேவாரத்தில்,

> அரும்பற்றப்பட ஆய்மலர் கொண்டு நீர்
> கரும்பற்றப் படத் தூவித் தொழுமினோ (V.12)[b]

என வந்துள்ளது. உலக வழக்குச் சொற்களை மிகுதியாக எடுத்துக் கையாண்டுள்ள தேவாரம், திவ்வியப் பிரபந்தம் முதலியவை தவிர ஏனை இலக்கியங்களில் இச்சொல் வருமாயின் இவற்றை அத்தேவாரம் முதலியனவற்றிற்கு மிகப் பிற்பட்டனவென்று கொள்ளுதல் சொல் வழக்காறொடு ([c]) பொருந்துவதேயாம். கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய திணைமாலை நூற்றைம்பதில்,

> 'வாடாத சான்றோர் வரவெதிர் கொண்டிராய்க
> கோடாது நீர் கொடுப்பி னல்லது- கோடா

b. V 1. 2- 1

c வழக்காற்றொடு என்பது சரியான வடிவம்.

எழிலு முலையும் இரண்டிற்கும் முந்நீர்ப்
பொழிலும் விலையாமோ போந்து'

என வருகின்றது[8]. இந்நூலினை 9-ஆம் நூற்றாண்டினதாகக் கொள்ளுதலே நேரிது. சிலப்பதிகாரத்தில் 'அடிகள் நீரே அருளுக' (பதிகம். 62) எனவும், 'அடிகள் நீரே அருளுதிராயின்' (X.62), 'இட்ட சித்தி யெய்துவீர் நீரே' (XI. 103), 'பெறுதிர் போலு நீர்' (XI, 123) எனவும் வருதல் இங்குக் கருதத்தக்கது. பஞ்ச காவியங்களுள் ஒன்றாகிய இதுவும் மேற்குறித்த காலத்த தென்பதற்கு இப்பிரயோகங்களும் சான்றாயமையும்[9]. பிற் காலத்து வழக்கு 'நீர்' என்பதனோடு அமைந்து விடவில்லை. நீர்கள் என்பதனை,

அக்கும் ஆமையும் பூண்டன லேந்தி இல்
புக்குப் பல்பலி தேரும் புராணனை
நக்கு நீர்கள் நரகம் புகேன்மினோ
தொக்க வானவரால் தொழுவானையே
(V. 97,14)

என அப்பர் வழங்கியுள்ளார். நீங்கள் என்பதனை,

'நூலவையார் போல் நீங்கள்
நோக்குமினே யென்றாள்' (1045)[d]

எனத்திருத்தக்கத் தேவரும்,

'பொய்ம்மாயப் பெருங்கடலிற் புலம்பா நின்ற
புண்ணியங்காள் தீவினைகாள் திருவே நீங்கள்'
(VI, 27, 1)[e]

என அப்பரும் வழங்கினர். ஆகவே முன்னிலைப் பன்மைப் பெயர்களைக் கால அடைவில்

நீம், நீஇர், நீயிர், நீவிர், நீர், நீயிர்கள்,
நீவிர்கள், நீர்கள், நீங்கள்

d- 1045—1, e vi.27.1-1

என நிறுவலாம். இவற்றுள் நீஇர், நீயிர் என்பன சங்க இலக்கிய காலத்தன. நீர், நீங்கள் என்பன 6-ம் நூற்றாண்டளவில் வழக்கிற் புகுந்து இன்றளவும் நிலைத்து நிற்கின்றன. நீம், நீஇர் நீயிர், நீவிர், நீர்கள் இவ்வைந்தும் வழக்கொழிந்து விட்டன. நீயிர்கள் நீவிர்கள் என்பன வீரசோழியத்திற்கு உரைவகுத்த பெருந்தேவனாராற் கொள்ளப்பட்டன;[10] இவையும் வழக்கொழி தனவே. இவற்றுள் சிலவற்றை மீண்டும் வழக்கில் புகுத்துதற்கு ஸ்ரீ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் முதலியோர் சில ஆண்டுகட்கு முன்னர் முயன்றனர்.

இனி 'நும்' என்பதை நோக்குவோம். இது சங்க இலக்கிய யங்களுள் பெருவரவிற்றாயுள்ளது.[11] இதுவே முன்னிலைப் பெயர்களுள் காலத்தால் முற்பட்டதென்பது மேலே குறிக்கபட்டது. முதலில் நின்ற நகர வொற்றுக் கெட்டு 'உம்' எனப் பிற் காலத்தாரால் ஆளப்பட்டது.

> ஒன்றாலுங் குறைவில்லை யூர்தி வெள்ளே
> றொற்றியூர் உம் ஊரே யுணரக் கூறீர் (அப்பர். VI,9,8)[f]
> காலவியாப் பொன்விளக்குந் தந்து உம்-ஐக்
> கைதொழுவேன் (சீவக. 1045)[g]

இவ்வாறு நகரவொற்றுக் கெடுதற்கு இரண்டு காரணங்கள் கூறுதல் கூடும். முதலாவது நகரவுகரத்திற்குரிய ஒலியை உச்சரிப்பது சிறிது சிரமமாகும். இவ்வெழுத்தில் தொடங்கும் சொற்களில் பெரும்பாலன உலகவழக்கில் சாதாரணமாய்க் காணப் படுவனவல்ல. காணுமவற்றுள்ளும் ஒருசில நகரவொகரம் முதலி யனவாகத் திரித்து உச்சரிக்கப்படும். இதனால் சிரமமின்மை அறியலாம். இரண்டாவது 'சந்தியில்' உம் எனப் பிரிக்கத் தக்கபடி நும் அமைந்து விடுதலும் உண்டு. உதாரணமாக, 'நின்னுமாம்பிற' (நன். உருபு புணர் 8) என்றது, நின், நும் என்றேனும் நின் உம் என்றேனும் பிரிக்க இடங்கொடுக்கும். இது போன்று பிரிந்து கெட்டு உகர மாத்திரையாய் நின்று

f vi.9.8—1—. g 1045—2

'உம்' என வருதலும் கூடும்[12]. ஆங்கிலத்தில் 'orange' என்ற சொல்லின் சரித்தை உணர்ந்தார் இதனை எளிதில் ஒப்புவர்.[13]

உருபேற்றவழி முன்னிலைப் பன்மை வடிவங்கள் மேலை இரண்டனோடு அமைந்து வீடவில்லை. நுங்கள், உங்கள் என்பனவும் தொடர்ந்தன.

நுங்கள்-க்கு யானுரைக்கேன் வம்மின் யான் வளர்த்த
கிளிகாள்

திருவாய் (6, 8, 5)[h]

எனவும்,

உன்னுருவிற் சுவை யொளியூறோசை நாற்றத்
துறுப்பினது குறிப்பாகு மைவீர் நுங்கள்

(அப்பர் VI. 27. 4)[i]

எனவும்,

பொங்குமத மானமே ஆர்வச் செற்றக்
குரோதமே யுலோபமே பொறையே நீங்கள்
உங்கள் பெரு மாநிலத்தி னெல்லை யெல்லாம்
உழறுமிது குறை முடிப்பீர்க் கரிதேயானேல்

(அப்பர் VI. 27. 7)[j]

எனவும் வரும் மேற்கோள்களால் இதனை உணரலாம். இங்குக் கவனிக்கத் தக்கது பிறிதொன்றுளது. நீர்கள், நீங்கள், நுங்கள் உங்கள் என்ற சொற்களில், அஃறிணைப் பன்மைக்குரியதாகத் தொல்காப்பியர் கூறிய 'கள்' விகுதி, பன்மைச் சொற்களோடு சார்த்தி வழங்கப்பட்டுள்ளது. எனவே நும், உம் என்பன பன்மை என்ற உணர்ச்சி மறையத் தொடங்கிய காலத்து, இவ் விகுதி புணர்க்கப்பட்டதாகல் வேண்டும். உருபேற்கும் நிலையில் முன்னிலைக்குரிய சொற்கள் நும், உம், நுங்கள், உங்கள் என்ற

h. 6. 8. 5- 1
i. VI. 27. 4- 1
j. VI. 27. 7- 1, 2

நான்குமாம். இவற்றுள் நும் ஒன்றே மிகப் பழமையானது.[14] மற்றைய மூன்று சொற்களும் பெருந்தேவனாரால் வீரசோழிய உரையில் (காரிகை. 37) காட்டப்பட்டன. மயிலைநாதர் உம் என்றதனை மட்டும் தம் உரையில் கூறினர்.[15] 'உம்' முதலியன 6-ம் நூற்றாண்டளவில் வழக்கில் வந்தனவெனக் கொள் ளலாம்.

இனி, முன்னிலை யொருமையில் உருபேற்றுவரும் வடிவினை நோக்குவோம் 'நின்' என இது வருமென்பது முன்பே குறிக்கப் பட்டது. இதுவே பண்டை இலக்கியங்களிலும் இலக்கணங் களிலும் பயின்றுவருவது. ஆனால் இதுவும் நாளடைவில் உன் என உருமாறத் தொடங்கிவிட்டது. உன் என்பது பிற் காலத்துத் தோன்றி இன்று வரையும் நிலைத்திருக்கிறது.

ஒருவனே எம்பிரானே உன் திருப் பாதங் காண்பான்,
(அப்பர் IV. 26. 10)[k]

அவ்வைக்கு மூத்தமாம னொருமகற்கின்று உன் தாதை
(சீவக. 1046)[l]

என்பனவற்றில் 'உன்' னும்,

பொன்னானாய் மணியானாய் போக மகனாய்
பூமிமேல் புகழ்தக்க பொருளே உன்னை
(அப்பர் IV. 95, 7)[m]

என்பதில் 'உன்னை'யும்,

உனை உனு முணர்வை நல்கா
யொற்றியூ ருடைய கோவே
(அப்பர் VI, 46. 2)[n]

என்பதில் 'உனை'யும்,

உன்னோடு உடனே யொருகடலில் வாழ்வாரை
(நாச்சி. திருமொழி 7. 5)[o]

k IV. 26. 10- 3
l 1046- 3
m VI. 95. 7- 3
n IV. 46. 2- 4
o 7. 5-1

என்பதில் 'உன்னோடும்',

உன்னை யெப்போது மறந்திட்டு உனக்கு இனிது ஆயிருக்கும்
(அப்பர் IV, 112. 4)[p]

என்பதில் 'உனக்கும்,

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன்,
உனது அருளால்
(அப்பர் IV, 94- 6)[q]

வந்து உனது அடியேன மனம் புகுந்தாய்
(பெரிய திருமொழி 111 5 – 1)[r]
உத்தமன் உனது நாமல்ல தொன்றுரைத்தல் தேற்றான்
(சீவக. 1048)[s]

என்பனவற்றில் 'உனது' ம்,
உன்னுடையவிக்கிரம மொன்றொழிய யாமெல்லாம்
(பெரியாழ் v. 4. 6)[t]

என்பதில் 'உன்னுடைய'வும் வருதல் காணலாம்.

மேற்காட்டியவற்றுள் உருபுகள் பலவும் 'உன்' என்பதனைச் சார்ந்து வந்தமை நோக்கத்தக்கது. இங்ஙனம் பெருவழக்காக வரும் இச்சொல்லினை வீரசோழியம்தான் முதன் முதற் கூறுகின்றது.[16] நன்னூல் இதனைக் கூறாதே விடுத்தொழிந்தது இதற்குரிய காரணம் யாதென்று நோக்குதற்குரியது. இலக்கண ஆசிரியர்கள் வழக்கும் செய்யுளும் என்னும் இரண்டினையும் ஆராய்ந்து நூலியற்றுதல் கடமை. தொல்காப்பியர் இம்முறையில் தமது பேரிலக்கணத்தை இயற்றினார் என அந்நூற்பாயிரம் தெரிவிக்கின்றது. செய்யுள் வழக்கை ஆராய்தல் தானும் எளிதில் இயலுவதன்று. தம் காலம் வரை தமது மொழியில் இயன்றுள்ள நூல்கள் அனைத்தையும் கற்றறிதல்

p IV. 112. 4- 3 q IV. 94. 6- 1,2
r. 111. 5.1—1
s. 1048—2
t. V. 4. 6—1

எத்துணை அரிய காரியம் என்பது சொல்லித்தெரிய வேண்டா. நூல்கள் கிடைப்பதற்கு இக்காலத்தில் வாய்த்திருக்கும் வசதிகள் முற்காலத்தில் இல்லை. நூற்றுக்கணக்கில், வேண்டுமானால் ஆயிரக்கணக்கில், பிரதிகளை வெளியிடுதற்கு வேண்டும் அச்சு யந்திரம் முற்காலத்தில் கிடையாது. பிரதிகளைப் பல இடங்களிலும் பரவச் செய்வதற்கு வேண்டும் போக்குவரவு வசதிகளும் இல்லை. இவை போன்றன இல்லாத காலத்து நூல்வழக்கை முற்ற அறிதல் என்பது இயலாத காரியமாம். இதுவே இயலாததாயின், உலக வழக்கை வேண்டிய அளவு அறிதல் தானும் கூடாததொன்றாகவே இருக்கும். என்றாலும் ஓராசிரியர் இவ்விரண்டின் இன்றியமையாமையையும் உணர்ந்து இவற்றை அறிய ஒருவாறு முற்படுவாராயின், அதுவே நமக்கு வியப்பை விளைக்கவல்லது. தொல்காப்பியர் இங்ஙனம் செய்தவர். நன்னூலார் முதலியோரெல்லாம் முன்னோர் நூலின் வழியே சென்றனரே அன்றிப் புதுவதாகத் தம் காலத்துத் தமிழை வேண்டுமளவு ஆராய்ந்தாரென்று கூறுதற்கு இயலவில்லை.

உலக வழக்கை முந்து நூலோர்கள் நன்கு ஆராயவில்லையென்பது ஒருபுறமிருக்க, ஆராயவேண்டும் அவசியமில்லை என்ற கருத்தும் கொண்டிருந்தார்கள். 'உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே' என்ற ஒரு நியதியை மேற்கொண்டு விட்டார்கள். தம் கருத்தின்படி உயர்ந்த நூலாசிரியர்களது வழக்குத்தான் இவர்களால் கொள்ளப்பட்டது. பக்திநூல்களோ இதற்கு முற்றும் மாறான கொள்கையுடையன. தமிழ்ச் சமுதாயத்தில் பல்வேறு திறத்தினரும் எளிதில் உணர்ந்து ஈடுபடும்படி இந்நூல்கள் அமைந்தன. இன்னிசையோடு பாடுதற்கு உரியன. எனவே சாதாரண மக்களது சொல்வழக்காற்றைப் பெரிதும் பின்பற்றியன. ஆதலால் கல்வியாளர்கள் வழங்காத வழக்குகள் இவற்றில் பெரும்பான்மையாய்க் காணப்படும். இவற்றுள் ஒன்று உன, உன்னை என்ற வரிசை. எனவே இலக்கண நூலோர் இவற்றைப் புறக்கணித்து வந்தனர். உயர்ந்த இலக்கிய ஆசிரியர்களும் இவற்றைக் கையாளாது விடுத்தனர். இவ்வழக்குகளுக்கு கால அடைவில் தகுதியேற்பட்டதன் பின்னரே உயர்ந்த இலக்கிய

ஆசிரியர்கள் இவற்றை ஆளத் தொடங்கினர். ஆகவே, சீவக சிந்தாமணி போன்ற ஓர் உயர்தர இலக்கியத்தில் இவை காணப்படுமாயின், அவ்விலக்கியங்கள் தேவாரம் முதலியவற் றிற்கு மிக பிற்பட்டன என்று எளிதில் கூறிவிடலாம். இவ் வகைச்சொல்லாராய்ச்சியின்றியே சீவகசிந்தாமணி காலத்தாற் பிற்பட்டதென வேறு சரித்திரக் காரணங்களால் துணியப்பட்டி ருப்பது இச்சொல்லாராய்ச்சியையும் முடிபையும் வலியுறுத்து கின்றது. கீழ்க்கணக்கு நூலாகிய திணைமாலை நூற்றைம் பதில்,

முலையாலும் பூணாலும் உன்கண தாஞ் சேர்ந்த
இலையாலும் இட்டகுறியை — உலையாது.
நீர் சிதைக்கும் வாய்ப்புதல்வன் நிற்கும் உனை முலைப்பால்
தார் சிதைக்கும் வேண்டா தழூஉ (152)

என்ற செய்யுளில் உன், உனை என்பவை வந்துள்ளன. ஒருகால் இச்செய்யுளில் ஏதேனும் ஐயப்பாடிருப்பின், திணைமொழி யைம்பதில் பின்வரும் செய்யுளைக் காண்க:

செந்தாமரை மலரும் செவ்வயல் நல்லூர
நொந்தால் மற்று உன்னைச் செயப்படுவ தென்னுண்டாம்
தந்தாயும் நீயே தரவந்த நன்னலம்
கொண்டாயும் நீயாயக் கால். (36)

இங்கே, உன்னை என்ற சொல்லை ஆசிரியர் வழங்கியிருக் கிறார் என்பதில் சிறிது ஐயமில்லை. கீழ்கணக்கைச் சார்ந்தன வாகப் போற்றப்படுதலாலே இவை உயர்ந்த இலக்கியங்களா கும். மேற்கூறிய நெறியே நோக்கின் இவற்றின் காலம் அப் பரது காலத்திற்கு ஒரு நூற்றாண்டளவாவது பிற்பட்டிருக் கலாம். இங்ஙனம் கீழ்க்கணக்கு நூல்களை எடுத்தாண்டுள்ள சிலப்பதிகாரத்தில் 'உன் பெருந்தானத்துறுதி யொழியாது' (XV. 34) என வருகின்றது. இங்ஙனம் வருதல் இக்காவியம் இன்னும் பிற்பட்டதாதலை உணர்த்துகிறது.*

*நன்றி— "சொற்களின் சரிதம்" (1956) பாரிநிலையம்.

## அடிக்குறிப்புகள்

1) aham, mām, mayā, mahyam

2) 'என்பது' என்ற சொல்லின் கடைசியில் நிற்கும் உகரம் குற்றியலுகரம். பின்னர் உயிர் வந்தால் முன் உள்ள சொல்லின் இறுதியில் உள்ள குற்றியலுகரம் கெட வேண்டும் என்பது தமிழ்ச் சநதி விதி (நனனூல் சூ163). ஆனால், இங்கே 'என்பது' என்ற சொல்லின் கடைசியில் உள்ள குற்றியலுகரம் பின்னர் 'ஏ' என்ற உயிர் வந்தபோதும் கெடாமல் முற்றியலுகரம் போல நின்று வகர உடம்படு மெய் பெற்று வந்நுள்ளது.

3) குறு. 22-5; நற். 9-3; அக. 2-8; புற. 2-9; ஐங். 29-4 பதி. 11-19; கலி. 2-27; பரி. 1-11; முரு. 272; பொரு 61; பெரு. 38; முல். 20; மது. 176; குறி. 181; மலை. 46.

4) நன்னூல் 294, 246.

5) Ko. niim; Ka. niim; Kur. niim; Malto. niim. (Krishnamurthy, Bh. [1968], Subrahmanyam, P.S (1967-68).

6) வீரசோழியம் 37

7) குன்று முண்டு நீர் பாடினிர் செலினே (110-6) எனவும் நீரும் மண்முழா அமைமின் பண்யாழ் நிறுமின் (152- 14) எனவும், புறநானூற்றுப் பதிப்பில் காணப்படுகின்றன. முற் செய்யுளில் 'குன்று முண்டு பாடினிர் செலினே, என்பது பாடமாதல் வேண்டும். மதுரைக்காஞ்சியில், 'நீர்யா ரென்னாது, (738) எனக் காணப்படுகிறது, இதுவும் 'நீயிர்யா ரென்னாது, என்றிருத்தல் வேண்டும். நீர் என்ற பிற்கால வழக்குப் புறநானூறு முதலியவற்றில் வருதல் அசம்பாவிதமாம். 'பிறர்க்கு நீர், இந்நீர ராகுதிர் என்று' எனவும், 'அனைத்துநீர் யாருள்ளி நோக்கினீர் என்று' எனவும் குறளில் (1319, 1320) வருதல், அவர் காலத்தோடு ஒத்த வழக்கேயாகும்.

8) திணைமாலை நூற்றைம்பது 15

9) வடமொழியிலும் 'பஞ்சகாவ்யம்' என்ற வழக்குக் காணப் படுகின்றது. பஞ்ச மஹா காவ்யாநி ராமாயண ரகு வம்ச குமாரஸம்-பவ மாக கிராதார்ஜுநீய ரூபாணி, (கவிகல் பலதா, 78.) Pañca mahākāvyāni Rāmāyaṇa Raghuvamsa Kumā rasambhava Māgha Kirātārjunīya rūpāṇi (Kavikalpaltā- 78)

10) வீரசோழியம் 37

11) பொரு. 151, பெரு. 104, மலை. 165, நற். 12-9, குறு. 58-1, ஐங். 83-2, பதிற். 20–1, கலி. 6-9, அக. 30-14, புறம். 9-5.

12) திராவிட மொழிகளில் சொல்முதல் நகர மெய் கெடுதல் பொதுவாகக் காணப்படுகிறது:- நீர் > ஈர் > ஈரம். வினைமுற்றில் முன்னிலைப் பன்மை நகரம் இழந்த இர், ஈர் ஆகியன வழங்குகின்றன. எ. கா. வந்தனீர் வந்தீர்.

13) Orange <* nāraṅga (Skt), nārangī (Hindi). The loss of initial n in Fr, Eng, and Ita. is usually ascribed to its absorption in the indefinite article in une narange, una naraucia" —The Oxford English Dictionary on Historical Principles -p. 169.

14) ஒருவீர் தோற்பினும் தோற்பதும் குடியே (புறம். 45) எனப் பதிப்பித்துள்ளது பிழையாதல் வேண்டும். உரையில் 'நுங்குடியன்றோ' என வருதலால் 'தோற்பது நுங்குடியே' என்பதே பாடமெனக் கொள்க. இங்ஙனமே நற்றிணையில் 'கோடேந்தல்குல் தழையணிந்துமோடு' (368) என்பதும், கோடேந்தல்குல் தழை யணிந்து நும்மோடு என்றிருத்தல் வேண்டும். தொலகாப்பியம், எழுத்து. 187.

[மேற்கண்ட பின் குறிப்புகள் சிறப்புப்பதிப்பாசிரியரால் கொடுக்கப்பட்டவை.]

15) நன்னூல் 16; 16) வீரசோழியம் 37

**இக்கட்டுரைக்குத் தொடர்புடைய நூல்கள், கட்டுரைகள்:-**


அகநானூறு (1935) கம்பர் விலாசம், சென்னை. ரா. ராகவையங்கார் பதிப்பு.

அப்பர் தேவாரம் (1985) IV, V, VI- திருமுறைகள், French Institute of Indology Pondicherry.

இளங்கோவடிகள் (1920) சிலப்பதிகாரம் - உ. வே. சாமி நாதய்யர் பதிப்பு, சென்னை.

ஐங்குறுநூறு (1920) உ. வே. சாமிநாதய்யர் பதிப்பு, சென்னை.

கலித்தொகை (1925) இ. வை. அனந்தராமையர் சென்னை.

குறுந்தொகை (1937) உ- வே. சாமிநாதய்யர் பதிப்பு, சென்னை.

குறிஞ்சிப்பாட்டு (1918) பத்துப்பாட்டு-உ.வே. சாமி நாதய்யர் பதிப்பு, சென்னை,

சிறுபாணாற்றுப்படை (1918) பத்துப்பாட்டு உ.வே. சாமி நாதய்யர் பதிப்பு, சென்னை.

திணைமாலை நூற்றைம்பது (1981) கணிமேதாவியார் நியூ செஞ்சரி புக்ஹவுஸ், சென்னை.

திணைமொழி ஐம்பது (1981) கண்ணாஞ் சேந்தனார், நியூ செஞ்சரி புக் ஹவுஸ், சென்னை.

திருத்தக்கத் தேவர் (1969) சீவக சிந்தாமணி: நச்சினார்க் கினியர் உரை'- உ.வே. சாமி தய்யர் பதிப்பு. சென்னை,

| | | |
|---|---|---|
| திருமுருகாற்றுப்படை | (1956) | பத்துப்பாட்டு'- உ. வே. சாமிநாதய்யர், பதிப்பு, சென்னை. |
| திருவாய் மொழி | (1981) | நம்மாழ்வார்-நாலாயிரத் திவ்யப்பிரபந்தம்' திருவேங் கடத்தின் திருமன்றம், சென்னை. |
| தொல்காப்பியம் | (1941) | தொல்காப்பியம் - சொல்லதி காரம், நச்சர் பவானந்தர் கழகம், சென்னை. |
| நற்றிணை | (1915) | அ. நாராயணசாமி ஐய்யர் பதிப்பு, சென்னை. |
| நாச்சியார் திருமொழி | (1981) | ஆண்டாள்-நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்-திரு வேங்கடத்தின் திரு மன்றம், சென்னை. |
| நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் | (1981) | திருவேங்கடத்தின் திருமன்றம், சென்னை. |
| நெடுநல் வாடை | (1956) | பத்துப்பாட்டு, உ.வே. சாமி நாதய்யர் பதிப்பு, சென்னை. |
| நேமிநாதம் | (1977) | குணவீர பண்டிதர் பழைய உரை, கா.ர. கோவிந்தராச முதலியார் பதிப்பு-சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். |
| பட்டினப்பாலை | (1956) | பத்துப்பாட்டு-உ.வே. சாமிநாதய்யர் பதிப்பு, சென்னை. |
| பத்துப்பாட்டு | (1956) | உ.வே. சாமிநாதய்யர் பதிப்பு, சென்னை. |

பதிற்றுப்பத்து (1949) உ.வே. சாமிநாதய்யர் பதிப்பு, சென்னை.

பரிபாடல் (1980) உ. வே. சாமிநாதய்யர் பதிப்பு, சென்னை.

பவணந்தி (1925) நன்னூல் - சங்கர நமச்சிவாயர் உரை - உ. வே. சாமிநாதய்யர் பதிப்பு, சென்னை.

புத்தமித்திரனார் (1970) வீரசோழியம்- பெருந்தேவனார் உரை - கா.ர. கோவிந்தராச முதலியார் உரை. கழகம்.

புறநானூறு (1971) உ.வே. சாமிநாதய்யர் பதிப்பு, சென்னை.

பெரியதிருமொழி (1981) திருமங்கையாழ்வார்-நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்-திருவேங்கடத்தான் திருமன்றம்,சென்னை.

பெரியாழ்வார் திருமொழி (1981) பெரியாழ்வார்–நாலாயிரத் திவ்யப்பிரபந்தம்- திருவேங்கடத்தான் திருமன்றம். சென்னை.

பெருந்தேவனார் (1970) வீரசோழிய உரை-சைவசித்தாந்தகழகம், சென்னை.

பெரும்பாணாற்றுப் படை (1956) பத்துப்பாட்டு-உ. வே. சாமிநாதய்யர், பதிப்பு, சென்னை.

பொருநராற்றுப் படை (1956) பத்துப்பாட்டு 'உ.வே, சாமிநாதய்யர் பதிப்பு, சென்னை.

மதுரைக் காஞ்சி (1956) பத்துப்பாட்டு உ, வே. சாமிநாதய்யர் பதிப்பு, சென்னை.

மலைபடுகடாம் (1956) பத்துப்பாட்டு - உ.வே. சாமிநாதய்யர் பதிப்பு, சென்னை,

முல்லைப்பாட்டு (1956) பத்துப்பாட்டு - உ.வே. சாமிநாதய்யர் பதிப்பு, சென்னை.

Agesthialingom, S. (1977) 'A Grammar of old Tamil,- with Index of Patiṟṟpattu, Annamalai University.

Andiappan, D. (1970) 'DescriptiveG rammar of Kalittokai' with index' Ph.D. Thesis Kerala University.

Elayaperumal, M (1975) 'Grammar of Aiṅkuṟunuuṟu' with index, Kerala University.

Index of Ancient Tamil literature (1968-70) 3. vols, French Institute of Indology. Pondicherry.

Kamatchinathan, A. (1964) 'Grammatical study of Naṟṟiṇai, with Index Ph.D. thesis, Kerala University.

Kandaswamy S.N. (1962) 'Paripaaṭal-A Linguistic study' with index, M. Litt. Thesis, Annamalai University,

Krishnambal, S.R. (1974) 'Grammar of Kuṟuntokai' with Index, Kerala University

Krishnamurthy, Bh. K. (1968) 'Dravidian Pronouns' Studies in Indian Linguistics, Deccan College, Poona.

Subramanyam P.S, (1968) The personal pronouns in Dravidian, Bulletin of the Deccan college, Poona.

Sundaram, RM. (1964) 'Grammatical Study of pattupaaṭṭu' with Index Ph.D. thesis, Kerala University,